1971 ஜூன் 22]

Transport facilities for Todhunter Nagar

* 25 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to State—

(a) whether any city buses are run to and from the colony at Todhunter Nagar behind the Teachers' College in Saidapet--

(b) if not whether there is any proposal to open any bus routes touching Todhunter Nagar; and

(c) if so, the details thereof?

தொழில் போக்குவரத்து துறை

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையைச் சார்ந்த மாநகர, புறநகர். மற்றும் மாவட்ட வழித்தடங்களில் ஓடும் பேருந்துகள் மலைச் சாலை வழியாகச் செல்கின்றன. தாடண்டர் நகர் குடியிருப்புக்கான போக்குவரத்து வசதிகள் இப்பேருந்துகளின் மூலம் கிடைக்கின்றன.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

Dr. H. V. HANDE : In view of the fact that large number of persons working in the Secretariat are living in Todhunter Nagar and in view of the fact that just as the Legislators will have to come regularly to this place, the Secretariat employees living in Todhunter Nagar also will have to come regularly and they also find it difficult to come, will this Government come forward at least to have some special buses run for the benefit of hundreds of persons residing at Todhunter Nagar, so that they can come conveniently to the office? Just as some companies like the Dunlop and other factories have special buses for bringing their employees to their offices and taking them back home, will the Government examine this proposition?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இப்போது 18-ஏ ரூட் பஸ் ஒன்று தாடண்டர் நகரில் இருந்து பாரீஸ் வரையிலே செக்ரட்டேரியட் வழியாக வந்து கொண்டிருக்கிறது. நம்முடைய சிப்பந்திகளை நெரிசல் நேரங்களில் கொண்டு வருவதற்குத் தனிப் பேருந்துகள் விடமுடியுமா என்பதைப் பற்றிக் கேட்டார்கள். அதைப்பற்றி ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. காலையில் தொழிலாளர்களை அழைத்துச் செல்வதற்கும் ஸ்பெஷல் பஸ்களை விடுவதென்றும் அதே ஸ்பெஷல் பஸ்கள் 9 மணிக்குப் பிறகு 'பீக் அவர் டிராபிக்'க்கு விடுவது என்றும் அந்த பஸ்களை மாலையில் 'பீக் அவர்' சர்வீஸுக்கு அனுப்பி அது முடிந்தவுடன் இரவில் பயணிகளை இரயில்வே ஸ்டேஷன் போன்ற

இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் வசதியாக எந்த அளவிற்கு பஸ்கள் தேவைப்படும் என்று ஆராயப்படுகிறது. 25, 30, பஸ்களை ஸ்பெஷல் பஸ்களாகப் போட்டு, காலையில் இங்குள்ள தொழிலாளர் களுக்கும், அலுவலக சிப்பந்திகளுக்கும், மற்ற நேரங்களில் வெளி யூரில் இருந்து வருபவர்களுக்கும் உபயோகப்படும்படி செய்வதற் கான ஒரு திட்டம் பரிசிலனையில் இருந்து வருகிறது.

DR. H. V. HANDE : Will the Government examine this proposition with particular reference to this aspect, namely, that there is the Secretariat office here and large number of persons are in one place, that is, Todhunter Nagar campus, and in view of the fact that number of employees of the Secretariat are found residing in one block and it will be easier to get them to the Secretariat from Todhunter Nagar and take them back? Will the Minister examine this particular proposition with reference to the suggestion I have made?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செக்ரட்டேரியட் ஸ்டாஃப் தாடண்டர் நகரில் இருந்து மட்டும் வருகிறார்கள் என்றல்ல. பல்வேறு இடங்களிலிருந்தும் வருகி றார்கள். ஆகவே, அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயனளிக் கின்ற வகையில் ஒரு முறையான திட்டத்தைப் பொதுவான தாகக் கொண்டு வருவதாகத் தான் திட்டம் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : When such an examination is made, will the Hon. Minister assure that it will not be at the expense of the general public that is, it will be provision of new buses and not the existing buses being diverted from the public to this particular purpose?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பயணிகள் பயணம் செய்வது என்பது நாள் முழுவதும் பல்வேறு விதமாக இருக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் பல்வேறு வகையாக இருக்கிறது. நெரிசல் நேரங்களில் அதிகப் பயணிகள் செல்வதற்கும் அவர்களை மட்டும் கொண்டு செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்பாடிருக்கிறது. இருக்கின்ற பஸ்களை எடுத்து விட்டு அவர்களுக்கு என்று பஸ் விடுவது என்ற நிலையில்லை. ஆகவே அவர்களுக்கு என்று தனியாக பஸ் விடப்படும் என்று சொல்லமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]